பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 06 திங்கட்கிழமை 20.06.2022 கதிர் 227

இது ரகசியம் அல்ல!

சட்டத்துக்குள் ஓட்டைகளைத் தேடிப்பிடித்துப் புகுந்து விளையாடுவதும் ஒரு கை தேர்ந்த தந்திரம்தான்.

பஸில் ராஜபக்ஷவின் இடத்திற்கு மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமனம் பெற்றிருப்பவர் ☞2

# கோட்டா விலகாத வரை எந்த உதவியும் கிட்டாது

## உறுதிபடக் கூறுகின்றார் சுமந்திரன் எம்.பி. ராஜபக்ஷ குடும்பத்தினால்தான் பேரவலமாம்



"நாட்டை விற்றாவது மக்கள் உயிர் வாழ வேண்டிய சூழ்நிலைக்கு இந்த நாட்டை ராஜபக்ஷ குடும்பம் தள்ளியுள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பத வியில் இருக்கும் வரை எந்தத் தரப்பும் இலங்கைக்கு உதவ முன்வராது." – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உறுதிபடக் கூறியுள்ளார் ☞2

## பஸ் நடத்துநரைத் தாக்கி ரூ.50 ஆயிரம் கொள்ளை!

### ஆவரங்காலில் சனியிரவு சம்பவம்

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸின் நடத்துநரைத் தாக்கி 50 ஆயிரம் ரூபாப் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. ஆவரங்கால் பகுதியில் சனியிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் பஸ்ஸில் ஏறிய இளைஞர் ஒருவர், ஆவரங்கால் பகுதியில் இறங்க முற்பட்ட பொழுது நடத்துநரைத் ☞03

## கல்வித்துறை சார்ந்தோரைப் புரிந்துணர்வோடு இணைக்கத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு

### சகல அதிபர்களிடமும் உருக்கமான வேண்டுகோள்

நாட்டில் உள்ள நெருக்கடியான சூழல் ஒருபோதும் மாறப் போவதில்லை. எமது சந்ததியை பாதுகாப்பது எமது தலையாய கடமை அதற்காக அனைவரும் புரிந்துணர்வோடு இணைவோம் என அதிபர்களிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளது.

இலங்கைத் புரிந்துணர்வோடு இணை வெளியிட்டுள்ள அறிக்கையிலேய இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

நாடு நெருக்கடியான சூழ்நிலைக்குள் அகப்பட்டுவிட்டது. இதனை மீட்க அரசாங்கம் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோற்றுப்போய் ☞03

## ஆசிரியர்கள் பிற பாடசாலை இணைப்புப் பெற இரு அதிபர்களின் அனுமதியும் பெற வேண்டும்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன் 20

வடக்கு மாகாணத்திற்குள் வெளிமாவட்டங்களிற்குப்பணிக்காகச் செல்லும் ஆசிரியர்கள் தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடுகாலத்தில்பயணிப்பதில் இடையூறு இருப்பின் இரு பாடசாலைகளின் அதிபர்களின் ஒப்புதலுடன் அருகில் உள்ள பாடசாலைகளில் தற்காலிக இணைப்பை பெற முடியும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் தெரிவித்தார்.

நாட்டில் எரிபொருளிற்கு நிலவும் நெருக்கடி நிலைமையில் யாழ்ப்பாணம், வவுனியா போன்ற போன்ற மாவட்டங்களில் இருந்து அதிக ஆசிரியர்கள் ஏனைய மாவட்டங்களிற்கு ☞03

## கிழக்குப் பாடசாலைகள் இன்று நடைபெறுமாம்!

### மாகாணப் பணிப்பாளர் தெரிவிப்பு



(காரைதீவு நிருபர் சகா)

சமகால பொருளாதார மற்றும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியிலும் இன்று திங்கட்கிழமை முதல் கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளும் வழமைபோல நடைபெறும் என்று கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார். ☞03

## கீரிமலையில் மர்ம மரணம்



கீரிமலை புதிய கொலனி பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஆண் ஒருவர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார். ☞03

## நாணய நிதியத்தின் குழு இன்று இலங்கை வருகை

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

இந்தக் குழு இன்று முதல் 30ஆம் திகதி வரை இலங்கையிலிருந்து, ஊழியர்மட்ட உடன்படிக்கையை எட்டுவதற்கு இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடுவதற்கு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞03

## சமுகம் தராத ஆசிரியர்களுக்கு விசேட விடுமுறைக்கு அனுமதி

கடமைக்குச் செல்லாத ஆசிரியர்களுக்கு விசேட விடுமுறை வழங்க கல்வியமைச்சின் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தாம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலையே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பிட்டுள்ளதாவது, ☞2

## காங்கேசன் அபிவிருத்திக்கு இந்தியா நான்கரைக் கோடி டொலர் கடனுதவி

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக இந்தியா நான்கரைக் கோடி அமெரிக்க டொலர்களை (சுமார் ஆயிரத்து 700 கோடி ரூபா) கடனாக வழங்கியுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தை துரிதமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

துறைமுக அபிவிருத்தியின் பின்னர் இந்தியாவில் இருந்து நேரடியாக சரக்குப் போக்குவரத்து நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

## இராமநாதபுரத்தில் ஒதுங்கிய இலங்கை மீனவர்களின் படகு



இராமநாதபுரம் – ஏர்வாடி கடற்கரைப் பகுதியில் இலங்கைக் கடற்றொழிலாளர்கள் பயன்படுத்தும் மீன்பிடிப் படகு ஒன்று நேற்றுக் கரை ஒதுங்கியுள்ளதாக மரைன் காவல்துறையின ☞03

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரபல கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக பெரேரா.அவரின் பெயர் வர்த்தமானியில் வெளியாகிவிட்டது. நாளை நாடாளுமன்றம் கூடினால் அவர் எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்று விடுவார். அவருக்கு அமைச்சர் பதவியும் காத்திருப்பதாகக் கேள்வி.

ஆனால் அதற்கிடையில் ஒரு சிக்கல். அவரது எம்.பி. நியமன விண்ணப்பத்தை தேர்தல் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டமையை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் ஐந்து மனுக்கள் செய்யப்பட்டுள்ளன. நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள். மற்றது தேர்தல் ஆணையத்திற்கு எதிரான ரிட் மனு.

இந்த மனுக்கள் இன்று பெரும்பாலும் ஒன்றாக உயர்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு வருகின்றன.

நீதிமன்றம் இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்கலாமா என்பது குறித்து இன்று தீர்மானிக்க இருக்கின்றது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை முடிவடையும் வரை எதிர்மனுதாரர் தம்மிக பெரேரா எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்வதற்கு இடைக்கால தடை விதிக்குமாறு மனுதாரர்களால் கோரப்பட்டுள்ளது.

இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பது பற்றிய முடிவை உயர்நீதிமன்றம் இன்று தீர்மானிக்குமானால், அதேசமயம் இந்த இடைக்கால தடை உத்தரவு குறித்தும் ஒரு முடிவை உயர் நீதிமன்றம் இன்று அறிவிக்க வேண்டியிருக்கும்.

இதைத் தவிர்த்து, உயர்நீதிமன்றம் இவ்விடயத்தில் முடிவை – தீர்மானத்தை – எடுப்பதை ஒருநாளைக்கு தள்ளி வைக்கப் பண்ணினால், நாளை காலை நாடாளுமன்றம் கூடியதும் முதல் வேலையாக சபாநாயகர் முன்னிலையில் தம்மிக பெரேரா எம்பியாகச் சத்தியபிரமாணம் செய்து விடுவார். அதன் பின்னர் அப்படி சத்தியபிரமாணம் செய்வதற்கு எதிராக நீதிமன்றம் இடைக்கால தடை விதிக்க முடியாது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

அதனால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீது நீதிமன்றத்தை முடிவு எடுக்க விடாமல் காலத்தை இழுத்தடிக்கச் செய்யும் வியூகத்தில் தம்மிக பெரேரா தரப்பு சீரியசாக இருக்கின்றது என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

இதற்காக சட்டரீதியான சாதுரியத்தை பயன்படுத்த அவரின் தரப்புச் சட்டத்தரணிகள் தீர்மானத்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

பணம் படைத்த தரப்பல்லவா? பணம் பாதாளம் வரையும் பாயும் என்று சும்மாவா சொன்னார்கள்?

தம்மிக பெரேராவுக்கு எதிராக ஐந்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றமையை வசமாகப் பயன்படுத்த அவர் தரப்பு தீர்மானித்துள்ளது.

ஐந்து வழக்குகளுக்கும் ஒரே சட்டத்தரணியை நியமிக்காமல், தனித்தனியாக சிரேஷ்ட சட்டத்தரணிகள் ஐவர் தலைமையில் ஐந்து சட்டத்தரணி குழுக்களை இன்று களத்தில் – நீதிமன்றத்தில் – இறக்குகின்றார் தம்மிக பெரேரா.

ஐந்து மனுதாரர்களின் சட்டத்தரணிகளும் தமது வாதங்களை சுருக்கமாக இன்று முன்வைத்தாலும், எதிர்மனுதாரர் தம்மிக பெரேராவின் ஐந்து சிரேஷ்ட சட்டத்தரணிகளும் ஒவ்வொருவராக நீதிமன்றத்தில் முன்னிலையாகி நீண்ட வாதங்களைச் சமர்ப்பித்து, மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்ற பூர்வாங்க விசாரணையை நாளை காலை நாடாளுமன்றம் கூடும் வரை இழுத்தடித்து, அவர்கள் சமாளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

இன்று மாலைக்குள் உயர் நீதிமன்ற விசாரணைகள் பூர்த்தியாகாமல் நாளைக்கு அது ஒத்திவைக்கப்படுமானால், நாளை காலை தம்மிக பெரேரா எம்.பியாகி விடுவார்.

அதன்பின்னர் அப்பதவியில் இருந்து அவரை அகற்றுவது இப்போதைக்குச் சாத்தியமாக இருக்க போவதில்லை என்ற நிலைமை உருவாகிவிடும். இன்று பிற்பகலில் நிலைமை ஓரளவுக்கு தெளிவாகும். அதுவரைக்கும் பொறுத்திருப்போம்.

– மின்னல் –

## கோட்டா விலகாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'குளோப் தமிழ்' இணையத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் இந்தப் பொருளாதார வீழ்ச்சி இந்த அரசால் உருவாக்கப்பட்ட ஒன்று. பொறுப்பு இல்லாமல் செயற்பட்டதன் காரணமாக – தேர்தல்களை வெல்ல வேண்டும் என்பதற்காகச் சில நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாகத்தான் – மெதுமெதுவாக வீழ்ச்சியடைந்து வந்த பொருளாதாரம் திடீரெனப் பாரியளவில் வீழ்ச்சியடைந்தது.

இந்த வீழ்ச்சிக்குக் காரணமானவர்களை அப்புறப்படுத்தினால்தான் நாட்டுக்கு எவரும் உதவி செய்ய முன்வருவார்கள்.

தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்குப் பிரதான புள்ளியாக இருக்கின்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்து பதவியில் இருக்கின்ற வரைக்கும் சர்வதேசத்தின் உதவிகள் நாட்டுக்குச் சரியான முறையில் கிடைக்கா.

கோட்டாபயவை அகற்றுங்கள் என்று உதவி தரக் கூடிய தரப்புகள் வெளிப்படையாக – நிபந்தனையாக – கூற மாட்டா.

ஆனால், நாட்டில் நிலையான அரசு இல்லாமல், அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமல் உதவிகள வழங்க முடியாது என்றே அவை கூறும். அதன் அர்த்தம் ஆட்சித் தலைவரை ஏற்கவில்லை என்பதுதான்.

அந்த மாற்றம் இல்லாமல் சர்வதேசத்தின் எந்த உதவிகளையும் நாம் எதிர்பார்க்க முடியாது.

இந்தப் பொருளாதார வீழ்ச்சிக்குப் பெரும் காரணகர்த்தாராக இருக்கின்ற ஜனாதிபதி பதவியிலிருந்து இறங்க வேண்டும் அல்லது அவரது நிறைவேற்று அதிகாரம் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் எதிர்க்கட்சிகள் உறுதியாக உள்ளன. ஆகையினால்தான் அரசை எதிர்க்கட்சியினர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அழைப்பு வருகின்ற போது அவர்கள் அதை நிபந்தனையாக முன்வைக்கின்றனர். அந்த நிபந்தனை இல்லாமல் நாட்டிலே மாற்றம் ஒருபோதும் ஏற்படப்போவதில்லை – என்றார்.

## சமுகம் தராத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதைய எரிபொருள் நெருக்கடி காரணமாக இருவாரங்கள் பாடசாலைகள் மூடப்படுகின்றன எனக் கல்வியமைச்சால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், நகர்ப்புறப் பாடசாலைகளை மூடுவதாகவும், கிராமப்புறப் பாடசாலைகளை நடத்தவுள்ளதாகவும் சனியன்று அறிவிக்கப்பட்டிருந்தது.

பாடசாலைகள் அனைத்தும் வகை 1ஏபி, 1சி , 2 என்னும் வகைகளாகவும், கஷ்ட – அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளாகவுமே வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இன்று வரை, நகர்ப்புறப் பாடசாலைகள் மற்றும் கிராமப்புறப் பாடசாலைகள் எவை என்பதைத் தீர்மானிப்பதற்குரிய குறிகாட்டிகள் எவையும் வெளியிடப்படாத சூழலில், சில மாகாணங்களில் சகல பாடசாலைகளையும் நடத்தும் செயற்பாடு நடைபெறுகின்றது.

கிராமப் பாடசாலைகளை நடத்தும் முடிவை கல்வியமைச்சு எடுத்திருந்தாலும், கஷ்ட – அதிகஷ்ட பிரதேச பாடசாலைகள் கிராமப்புறங்களிலேயே அமைந்துள்ளன. இவ்வகையான பாடசாலைகளுக்கு வெளிமாவட்டங்களிலிருந்தும், தூர இடங்களிலிருந்தும் ஆசிரியர்கள் சென்று பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாறு பணியாற்றுபவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதற்கான எரிபொருள் வசதிகளைப் பெறுவதற்குரிய எந்தவொரு ஏற்பாடுகளையும் செய்யாது, பணிக்கு அழைக்க எடுத்துள்ள முடிவு கண்டனத்துக்குரியதாகும்.

பாடசாலைகளை சீராக நடத்தமுடியாமைக்கு அரசாங்கமே காரணமாகும். பொருள்கள் தட்டுப்பாடான நிலையில் மக்களுக்கான பங்கீடு தொடர்பாக அரசாங்கத்தின் செயற்திறனற்ற தன்மைகளே நெருக்கடிகளைத் தீவிரப்படுத்தியுள்ளன.

எனவே – பாடசாலைகளுக்கு செல்ல முடியாத ஆசிரியர்கள் கடமைக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. கடமைக்குச் செல்லாத ஆசிரியர்களுக்கு விசேட விடுமுறை அனுமதிக்கப்படுமென கல்வியமைச்சின் செயலாளருடனான சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது. –என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.







காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கைக்கு மேலும் உதவுவது குறித்து ஆராய்கின்றது இந்தியா

இலங்கையில்ஏற்பட்டுள்ளநெருக்கடி நிலையில் இலங்கைக்கு மேலும் உதவுவது குறித்து இந்தியா ஆராய்கின்றது.

நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவில் இது குறித்து ஆராயப்பட்டது என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தமது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எதிர்நோக்கியுள்ள வெவ்வேறு பிரச்சினைகள் மற்றும் அதற்கு இந்தியாவால் வழங்கக் கூடிய ஒத்துழைப்புகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இக்கட்டான நிலையில் அண்டையநாடான இலங்கையுடன் இணைந்து செயற்படுவதற்கு ஒருமித்த ஆதரவு வழங்கப்பட்டுள்ளது எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## கல்வித்துறை சார்ந்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விட்டன. நாளுக்கு நாள் வரிசைகள் பெருகுகின்றனவேதவிர, எந்தமுன்னேற்றமும் இல்லை. இந்த அபாயகரமான சூழ் நிலையில் இலங்கையில் உள்ள குழந்தைகளின் வாழ்வு எமது கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளைச் சீராக இயக்குவதற்கான எந்தப் பொறி முறையும் அரசிடம் கிடையாது.

எம்மால் முன்வைக்கப்பட்ட பொறி முறைகளையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தாமல்தான்தோன்றித்தனமாக விவசாயிகளுக்கு வழங்கிய முடிவைப் போன்று கல்வியிலும் முடிவுகளை எடுக்கின்றது. அதில் ஒருசில மாவட்டங்களில் பாடசாலைகளை மூடுதல், கிராமப்புற பாடசாலைகளைக் கைவிடுதல், முழு மாணவர்களுக்கும் பயனளிக்காத இணையவழிக் கற்றலை அமுல்படுத்துதல் போன்ற தவறான முடிவுகளே எடுக்கப்படுகின்றன.

ஆனால் அரசாங்கம் எந்த முடிவை எடுத்தாலும் நெருக்கடியான காலங்களில் அதிபர்களே சமயோசிதமான முடிவுகளை எடுத்தார்கள் என்பதனை மறுக்க முடியாது. அதே போன்று இன்னும் நெருக்கடியான இந்தச் சூழ்நிலையில் அதிபர்கள் மிக்க நிதானத்துடன் பாடசாலையின் அனைத்து மனித மனங்களையும் இணைத்து, முரண்பாடுகள் இல்லாமல் எம்மை நம்பி ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளின் அறிவு வளம் பெற அடுத்த படிநிலையை உருவாக்குவோம் என உருக்கமாக உங்களை வேண்டிக் கொள்கின்றோம்.

விசேடமாக ஆசிரியர்களின் பொருளாதார நிலை, போக்குவரத்து, அவர்களின் குடும்பநிலை என்பவற்றை கருத்தில் கொண்டு உச்ச நெகிழ்ச்சிப் போக்கோடு அனைத்தையும் கையாளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். – என்றுள்ளது.

## நாணய நிதியத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்க இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான அதன் உறுதிப்பாட்டை அது வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சென்று வருவதில் நெருக்கடி ஏற்படலாம். அவ்வாறு நெருக்கடியை எதிர்கொள்ளும் ஆசிரியர்கள் தமது சொந்த மாவட்டங்களில் இந்த ஆண்டு இறுதிவரை தற்காலிக இணைப்பை பெற்றுக்கொள்ள விரும்பினால் தாம் தற்போது பணியாற்றும் பாடசாலை அதிபரிடமும் எந்த பாடசாலையில் பணியாற்ற விரும்புகின்றாரோ அந்தப் பாடசாலையின் அதிபரிடமும் ஒப்புதலை பெற்றுச் சமர்ப்பிப்பதன் மூலம் இதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள முடியும்.

இதேபோன்று ஒரே மாவட்டத்தில் அதிக தூரம் பயணிக்கும் ஆசிரியர்களும் அருகில் உள்ள பாடசாலையில் தற்காலிக இணைப்பை பெற விரும்பினால் இதே நடைமுறையில் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேநேரம் மாகாணத்திற்கு வெளியே பணியாற்றும் ஆசிரியர் தற்போது பணியாற்றும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு ஆகிய வற்றின் அனுமதியை பெற்று வழங்கினால் மட்டுமே அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும். – என்றார் அவர்.

## கிழக்குப் பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்றைய தினம் பாடசாலைகள் நடைபெறுமா? இல்லையா? – என்ற சந்தேகம் மக்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் இருந்தது.

இருந்த போதிலும், நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் திசாநாயக்க மற்றும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் புள்ளநாயகம் ஆகியோர் கிழக்கிலுள்ள 17 வலயக்கல்விப் பணிப்பாளர்களோடும் சூம் முறையிலான தொழில்நுட்பத்துடன் இணைந்து கூட்டத்தை நடத்தி மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளனர் .

அதன்படி, கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளும் இன்று முதல் வழமைபோல இயங்கும்.

அதேவேளை, தூர இடப் பாடசா லைகளுக்கு செல்ல முடியாத ஆசிரியர்கள் வீட்டிலிருந்து 'ஒன்லைன்' முறை மூலம் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். அதனை அதிபர்கள் உறுதிப்படுத்த வேண்டும் .

ஏலவே அறிவித்தபடி அருகிலுள்ள பாடசாலைகளுக்கு யாரையும் இணைப்புச் செய்ய அனுமதிப்பதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய சகல ஆசிரியர்களும் பாடசாலைக்கு செல்ல வேண்டும். செல்ல முடியாத எரிபொருள் பிரச்சினை உள்ள ஆசிரியர்கள் வீட்டிலிருந்து ஒன்லைன் மூலம்கற்பிக்கலாம்என்றுகூறப்படுகிறது.

இதேவேளை, தூரத்துக்கு செல்லும் மாணவர்கள் எரிபொருள் பிரச்சினை காரணமாக செல்ல முடியாவிட்டால் அவர்கள் அருகில் இருக்கக்கூடிய பொருத்தமான பாடசாலைக்கு சென்று கல்வியை கற்கலாம் என்றும் கூறப்படுகிறது.

மேலும் வலயக்கல்வி பணிமனை உத்தியோகத்தர்கள் சம்பந்தமாகவும் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக அந்தந்தவலயக்கல்விப்பணிப்பாளர்கள் முடிவு எடுக்கவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## பஸ் நடத்துநரைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாக்கியவரின் கையிலிருந்த பணத்தை அபகரித்துக் கொண்டு தப்பி ச்சென்றுள்ளார்.

இதன் போது தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளான – பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த – நடத்துநர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பணத்தைக் கொள்ளையடித்த சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், சாரதி சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

## இராமநாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற மரைன், கியூ பிரான்ஞ் காவல் துறையினர் படகில் கடத்தல்காரர் யாரும் கடத்தல் பொருள்களைக் கொண்டு வந்தார்களா? அல்லது கடல் சீற்றம் காரணமாக நங்கூரம் அறுந்து படகு கடலில் மிதந்து வந்து கரை ஒதுங்கியதா எனப் பல்வேறு கோணங்களில் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வீட்டுக்கு உடன் போ; பொய் சொல்லாதே!

## யாழில் பீரிஸின் உருவப்பொம்மையை எரித்து ஐ.நா. அலுவலகம் முன்பாக மக்கள் போராட்டம்







இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸின் உருவப்பொம்மையை யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் கள அலுவலகத்துக்கு முன்னால் நேற்று எரித்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசு தவறான கருத்துக்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தெரிவித்துள்ளது எனக் கூறி அதற்கு எதிராக இன்று காலை யாழ். நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள் பேரணியாக ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்கு வந்தடைந்தனர்.

அதன்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தெரிவித்துள்ள கருத்துக்களை அவர்கள் வன்மையாகக் கண்டித்தனர்.

பீரிஸ் உடனே வீட்டுக்குப் போ, பொய் சொல்லாதே, இன அழிப்பு வேண்டாம், சர்வதேச விசாரணை வேண்டும் போன்ற வாசகங்களைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பீரிஸின் உருவப்பொம்மையும் நடு வீதியில் தீயிட்டுக் கொளுத்தினர்.

போராட்டத்தின் நிறைவில், போராட்டக்காரர்கள் ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்குத் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளித்தனர்.

இந்தப் போராட்டத்தில் அரசியல் கைதிகளின் உறவுகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூகத்தினர், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## கீரிமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சங்கிலியன் நடராசா என்கிற 63 வயதான நபரே உயிரிழந்தவராவார்.

உயிரிழப்பு கொலை என்கிற ரீதியில் காங்கேசன்துறை பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் மரண விசாரணை அதிகாரி மற்றும் தடயவியல் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீட்சிக்கு வழி என்ன?

**“இந்த நாட்டின் உடனடிப் பொருளாதார சரிவுக்கு – வீழ்ச்சிக்கு – பிரதான காரண கர்த்தா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அவர் பதவி விலகாத வரையில் எந்த நாட்டிலிருந்தும், எந்த சர்வதேச அமைப்பிலிருந்தும் எவ்வித உதவியும் நாட்டுக்குக் கிடைக்கப் போவதில்லை.” – என்று உறுதிப்படச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.**

**அவர் கூற்றுப்படி, தேர்தல்களில் வெல்லும் நோக்கோடு, பொறுப்பின்றி, தவறான முடிவுகளை எடுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே இவ்வளவு பின்னடைவுகளுக்கும் பிரதான காரணகர்த்தா, சூத்திரதாரி. அவர் பதவியில் – அதிகாரத்தில் – இருக்கும் வரை எந்தத் தரப்பும் இலங்கையை நம்பி கடனோ, உதவிகளோ வழங்கப் போவதில்லை.**

**இந்தியா மட்டும் அயல்தேசம் பசியோடு இருப்பதைச் சகிக்க முடியாது என்ற இக்கட்டில் சளைக்காது உதவி வருகின்றது என அவர் சுட்டுவதும் சரியானதுதான்.**

**உடனடிப் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் யார் என்பதைக் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரன் குற்றச்சாட்டு விரலை நேரடியாக ஜனாதிபதியை நோக்கி நீட்டி, குற்றம் சுமத்தும் அதேசமயத்தில், இந்த நிலைமைக்கான நீண்ட கால காரணத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிடுகின்றார்.**

**தமிழர் தேசத்தின் மீது முப்பது வருட கால யுத்தத்தை நடத்துவதற்காக முறையற்ற வட்டி வீதங்களில் அதிக கடன்களை வாங்கிக் குவித்தீர்கள். அதன் பிரதிபலனை இலங்கை மக்கள் யாவருமே இப்போது அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் என விசனப்படுகின்றார் சம்பந்தன்.**

**தவறான, மோசமான பொருளாதார நடவடிக்கைகளை தேர்தல்களை இலக்கு வைத்து மேற்கொண்ட கோட்டாபய ராஜபக்ஷ அதன் காரணமாகப் பெரும் தவறிழைத்தவராகின்றார் – குற்றமிழைத்தவராகின்றார் – அவரை நம்பி சர்வதேச சமூகம் இனிக் கடனோ, உதவிகளோ தராது என்று சுமந்திரன் சுட்டிக்காட்ட, அதே கோட்டாபயவின் அரசு மீது சர்வதேசம் நம்பிக்கை வைக்க மாட்டாது என்பதற்குப் பிறிதொரு காரணத்தை அவரின் தலைவர் சம்பந்தன் விவரிக்கின்றார்.**

**தனது சொந்த நாட்டின் தேசிய இனக்குழுமமான தமிழர்களுக்கு நீதி, நியாயமான – நின்று, நிலைத்து நீடிக்கக் கூடிய – தீர்வு ஒன்றை வழங்காமல், அவர்கள் மீது பேரினவாதக் கொடூர யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்ட ஆட்சித் தரப்பை, எப்படி நம்புவது, அதை நம்பி எப்படிக் கடன் கொடுப்பது என்ற அவநம்பிக்கை சர்வதேச சமூகத்துக்கு உண்டு. ஆகவே இந்தச் சிங்கள, பௌத்த பேரினவாத அரசாட்சிக்கு ஆதரவாக எந்த நாடும் நம்பிக்கை வைத்து உதவித் திட்டங்களை வழங்காது என்று சம்பந்தன் குறிப்பிட்டிருக்கின்றார்.**

**இதுதான் யதார்த்த நிலைமை. கோட்டாபய ராஜபக்ஷ போன்ற எதேச்சாதிகாரியிடமிருந்து நாடு விடுவிக்கப்பட வேண்டும். பௌத்த, சிங்களப் பேரினவாத இனவெறித் திமிரிலிருந்து கொழும்பு ஆட்சிப் பீடம் தன்னை முழுமையாக விடுவிக்க வேண்டும். சிறுபான்மையினரையும் உரிய கௌரவம், நீதி, சம அந்தஸ்துடன் அவரணைக்கும் மனப்பக்குவம் தென்னிலங்கை ஆட்சிப் பீடத்துக்கு வரவேண்டும். அப்போதுதான் துவண்டு கிடக்கும் நமது நாட்டுக்கு மீட்சி கிடைக்கும்.**

# எரிபொருள்கள் இன்மையினால் வைத்தியசாலைகளை மூடும் நிலை!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் எச்சரிக்கை

எரிபொருள் வழங்குவதில் சுகாதார சேவைப் பிரிவினருக்கு முன்னுரிமை அளிப்பதாக அரசாங்கம் தெரிவித்திருந்தபோதிலும், இதுவரையிலும் அதற்கான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் வைத்தியசாலைக்கு வருகை தரும் வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவைப் பணியாளர்கள் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.

இந்த நிலை தொடருமானால் வைத்தியசாலைகளை மூட வேண்டிய நிலை உருவாகும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் ருக்சான் பெல்லன தெரிவித்தார்.

கறுப்புச் சந்தையில் எரிபொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் மோசடிக்காரர்கள் எரிபொருள்களைப் பதுக்கி வைப்பதால் இந்த மோசமான நிலை உருவாகியுள்ளதுடன், அவ்வாறனவர்களுக்கு எதிராக பொலிஸாரும் இராணுவத்தினரும் மௌனம் சாதிப்பதால், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் செல்லும் வைத்தியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

“எரிபொருள் மாபியா இன்று நல்ல வருமான ஆதாரமாக மாறியுள்ளது. எரிபொருள் சேகரிக்கும் மோசடிக்காரர்கள் ஒரு லீற்றர் பெற்றோலை 650 ரூபாவுக்கும், ஒரு லீற்றர் டீசலை 550 ரூபாவுக்கும் விற்கின்றனர். அத்தியாவசிய சேவையான சுகாதார சேவைப் பிரிவினருக்கு எரிபொருள் வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக கூறப்பட்டாலும், இந்த மோசடிக்காரர்களால் அவ்வாறான செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு தடையாகவுள்ளது”. – என்றார்.

# எரிபொருளுக்கு காத்திருப்போர் மீது பொலிஸ் தாக்குதல் மோசமான விளைவுகளை நாட்டில் ஏற்படுத்துமாம்!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் காட்டம்

எரிபொருளுக்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் மக்கள் மீது பொலிஸார் தாக்குதலை மேற்கொள்வது தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

பெற்றோல் டீசலிற்காக நாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் பல கிலோமீற்றர் நீளும் வரிசைகளில் காத்திருக்கின்றனர், சில சந்தர்ப்பங்களில் நாள்கணக்கில் காத்திருக்கின்றனர் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயு உட்பட ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்கு மக்கள் பெரும் தட்டுப்பாட்டை எதிர்கொள்கின்ற – தீர்வொன்று கண்ணிற்கு தென்படாத நிலையிலேயே எரிபொருளுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுமக்கள் பலர் தங்கள் வருமானத்தை இழந்துள்ளனர் தங்கள் குடும்பத்தினருக்கு உணவு வழங்குவதற்கான வழியில்லாத நிலையில் உள்ளனர் எனவும் தெரிவித்துள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வரிசைகளில் நிற்கும்போதும் மருந்துகள் இன்மையாலும் பல மரணங்கள் நிகழ்ந்துள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளது.

இந்த மோசமான நிலைமை மக்களை விரக்தி நிலைக்குத் தள்ளியுள்ளது. அதன் காரணமாக சீற்றமும் விரக்தியும் காணப்படுகின்றது, கடந்த சில நாள்களாக நாட்டின் பல பகுதிகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் மத்தியில் அதிருப்திதோன்றிய பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

குருநாகல் மஸ்பொத்த பகுதியில் கைத்துப்பாக்கியுடன் பொலிஸ் உத்தியோகத்தர் மீது எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு அருகில் தாக்குதலை மேற்கொள்ளும் காட்சிகளும் அதனை தொடர்ந்து இடம்பெற்ற வாக்குவாதங்களும் அத்துருகிரியவில் இடம்பெற்ற வன்முறைகளும் நாட்டில் இடம்பெறும் வன்முறைகளுக்கான சிறிய உதாரணம் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பொலிஸாரினதும் இராணுவத்தினரினதும் குடும்பத்தவர்களும் இதேநிலைமையை எதிர்கொள்வதால் அவர்கள் மிகவும் சவாலான சூழலில் பணியாற்றுகின்றனர். இருந்தபோதிலும் சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்கள் பொதுமக்களைக் கையாள்வதில் மிகுந்த பொறுமையுடனும் எச்சரிக்கையுடனும் செயற்படுவது மிகவும் முக்கியம் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொலிஸார் தங்கள் கடமைகளை செய்யும்போது புரிந்துணர்வுடனும் மிகுந்த பச்சாதாபத்துடனும் செயற்படுவதும் பொதுமக்களின் துன்பத்தை ஏற்றுக்கொள்வதும் அவசியம், சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் அனைத்து சம்பவங்களின் போதும் நியாயமாகவும் பாரபட்சமின்றியும் செயற்பட வேண்டும், பாரபட்சமானது நியாயமற்றது என தோற்றமளிக்கும் எந்தவொரு செயலும் ஏற்கனவே காணப்படும் அவநம்பிக்கையை அதிகரிக்கும் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தின் மீதும் அனைத்து சட்ட அமுலாக்கல் அதிகாரிகளின் மீதும் பொதுமக்களுக்கு ஏற்படும் அவநம்பிக்கை நாட்டுக்கு மோசமான சீர்செய்ய முடியாத பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# பைஸர் தடுப்பூசி கொடுத்து மியன்மாரிடமிருந்து அரிசி!

## பெறுவதற்கு அரசு அவதானம்

நாட்டில் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தின் பின்னர், தற்போதும் எஞ்சியுள்ள சுமார் 6 லட்சம் பைஸர் தடுப்பூசியை மியன்மாருக்கு வழங்கி, அதற்கு பதிலாக அங்கிருந்து அரிசியை பெற்றுக்கொள்வது தொடர்பில் அரசாங்கத்தின் அவதானம் திரும்பியுள்ளது.

இலங்கையிடமிருந்து பைஸர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள மியன்மார் விருப்பம் தெரிவித்துள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில் நுட்ப சேவைகள் பிரிவின் பணிப்பாளரும் மருத்துவ உதவிகள் தொடர்பிலான இணைப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இருப்பில் உள்ள இந்த 6 லட்சம் பைஸர் தடுப்பூசிகலும் சில மாதங்களில் காலாவதியாகும் நிலையில் உள்ளதால் அவற்றை மியன்மாருக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையிலேயே, மியன்மாரிடமிருந்து அரிசியை கொள்வனவு செய்வது தொடர்பில் அரசாங்கத்தின் அவதானம் திரும்பியுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.



# மீண்டும் பொதுவெளியில் ஆன்மீக குரு தலாய் லாமா

அறுபது ஆண்டுகளாக பௌத்தத்தின் முகமாக விளங்கி வருகின்றவரும், பௌத்த துறவியாக மாறி, பூகோளத்தின் சமாதானக் சின்னமாகத் தோற்றமளிப்பவருமான தலாய் லாமா, கடந்த வாரம் பார்வையாளர்களைச் சந்தித்து, ஊக்குவித்து, இன்றிலிருந்து எந்தத் தீங்கும் செய்ய மாட்டோம், ஆனால் மற்றவர்களுக்கு மட்டுமே உதவுவோம் என்று உறுதியளிக்குமாறு நல்லுபதேசம் வழங்கினார்.



நீண்ட இடைவெளிக்குப் பிறகு, தலாய் லாமா தனது மனதுக்கு நெருக்கமான தலைப்புகளில் பொதுப் பேச்சு, போதனை மற்றும் மத நடவடிக்கைகளில் பங்கேற்பதற்காக, தனது குடியிருப்புக்கு அருகில் உள்ள முக்கிய கோவிலான சுக்லாக்ஹாங்கில் அடிக்கடி நேரலையில் பொது நிகழ்ச்சிகளைத் தொடங்கியுள்ளார்.

கொவிட் – 19 தொற்றுநோய் வெடித்த பிறகு, ஜனவரி 2020 இல் போத்கயாவை விட்டு வெளியேறிய பின்னர் கடந்த மார்ச் 18 அன்று தான் புனிதர் தலாய்



லாமா தனது முதல் பொது நிகழ்வில் வெளிப்பட்டார்.

அவரது – புனிதர் – நிச்சயமாக வெளிநாட்டுப் பயணங்களைத் தொடங்குவார், ஆனால் தற்போது எந்த திட்டமும் இல்லை என்று ஒரு செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறினார். 86 வயதான புனிதர் தலாய் லாமா பல நாடுகளுக்கு அழைக்கப்பட்டுள்ளார், ஆனால் தொற்றுநோய் காரணமாக அவர் பொது ஈடுபாட்டைக் குறைத்துள்ளார்.

ஜூலையில், அவர் லடாக்கிற்கு ஒரு பயணத்தை மேற்கொள்கிறார், என்று செய்தித் தொடர்பாளர் கூறினார்.

தொற்று நோய்ப் பரவலின் பின்னர் தர்மசாலாவிற்கு வெளியே அவரது முதல் பொது வருகை இதுவாகும்.

தொற்றுநோய்க்கு மத்தியில், அறிவியலும் நம்பிக்கையும் இணைந்து வாழ முடியும் என்பதை விளக்க விரும்பும் ஆன்மீகத் தலைவர் அந்த மார்க்கத்தில் போதனைகளை வழங்கினார். மெய்நிகர் முறையிலான பேச்சு, உபதேச உரைகளுக்கான அழைப்புகளை ஏற்றுக்கொண்டார்.

அரசியல்வாதி, ஆன்மீக ஆசிரியர் மற்றும் இறையியலாளர் என உலகம் முழுவதும் அறியப்பட்ட தலாய் லாமா 2021 ஆம் ஆண்டில், பொது நிகழ்வுகள் எதிலும் பங்குபற்றவில்லை. அது 2020 இல் – ஒன்று, 2019 இல் – ஒன்பது, 2018 இல் – 10 மற்றும் 2017 இல் – ஒன்பது ஆக எண்ணிக்கை அடிப்படையில் அமைந்தது.

2018 ஆம் ஆண்டில், தலாய் லாமா, பராக் ஒபாமா, அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசி மற்றும் ரிச்சர்ட் கெரே போன்ற செல்வாக்கு மிக்க நபர்களைச் சந்தித்தார். எல்லோராலும் ஒரே மாதிரியாக மதிக்கவும் பட்டார். ஏழு நாடுகளில் 2017 இல் ஐந்து பொது நிகழ்வுகள் மற்றும் 2016 இல் 12 பொது நிகழ்வுகளை நடத்தினார்.

ஆனால், தொற்றுநோய்க்கு மத்தியில் அவரைப் பார்க்க வெளிநாட்டுத் தலைவர்கள் யாத்திரை மேற்கொள்கிறார்கள். திபெத்தியப் பிரச்சினைகளுக்கான அமெரிக்க சிறப்பு ஒருங்கிணைப்பாளர் உஸ்ரா ஜீயா, மே மாதம் மெக்லியோட்கஞ்சில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் – இந்த வடக்கு மலை நகரத்தின் புறநகர்ப் பகுதியில் உள்ள ஒரு சிறிய மற்றும் வினோதமான மலைப்பகுதிக்கு – சென்றார்.

இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள தர்மசாலா தனது தாய்நாடான திபெத்தின் எல்லைக்கு அருகில் உள்ளது.

அவர் தற்போதைய தமது முதல் பொது நிகழ்வில் மருத்துவப் பரிசோதனைக்காக நான் இப்போது டெல்லிக்குச் செல்ல நினைத்தேன். இருப்பினும், எனக்கு உடல்நிலைப் பிரச்சினையில்லை, உண்மையில் நான் எதற்கும் தகுதியுடையவனாகஉணர்கிறேன், எனவே நான் போக வேண்டாம் என்று முடிவு செய்தேன். – என்று குறிப்பிட்டார்.

“வழக்கமாக, குளிர்காலத்தில், நான் போத்கயாவுக்குச் செல்வேன், ஆனால் மீண்டும், இந்த ஆண்டு தர்மசாலாவில் ஓய்வெடுக்கவும், வியங்களை எளிதாகவும் செய்ய முடிவு செய்தேன்.” – என்றார் அவர்.

அவரது அலுவலக இணைய தளத்தில் ஓர் இடுகையின்படி, தலாய் லாமா ஆண்டு முழுவதும் பல்வேறு நேரங்களிலும் வெவ்வேறு இடங்களிலும் போதனைகளை வழங்கவிருக்கிறார்.

தலாய் லாமா பொது நல்லுபதேச உரைகளையும் வழங்குகிறார். இந்தியாவில், போதனைகள் மற்றும் பொது பேச்சுக்கள் பொதுவாக இலவசம். மற்றும் பொது மக்களுக்கு அந் நிகழ்வுகள் திறந்திருக்கும். இருப்பினும், இந்தியாவிற்கு வெளியே போதனைகள் மற்றும் பொதுப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கு ஒருவர் வழக்கமாக டிக்கெட் வாங்க வேண்டும். டிக்கெட் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானம், அரங்கத்தின் செலவுகள் மற்றும் அவரது வருகை தொடர்பான பிற செலவுகளுக்குப் பயன்படுத்தப் படுகிறது.

தர்மசாலாவில் உள்ள முக்கிய திபெத்திய கோவிலில் வருடத்திற்கு பலமுறை அவரது போதனைகள் எவ்.எம். சனல்களில் ஆங்கிலம், சீனம், கொரியன், வியட்நாம், இந்தி மற்றும் ஜப்பானியம் உள்ளிட்ட பல மொழிகளில் அதிகாரப்பூர்வமாக மொழிபெயர்க்கப் படுகின்றன.

1967 ஆம் ஆண்டில், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர், நாடுகடத்தப்பட்ட பின்னர், ஜப்பான் மற்றும் தாய்லாந்திற்கு விஜயம் செய்த பின்பு தனது முதல் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டார்.

1973 ஆம் ஆண்டில், அவர் தனது முதல் பயணத்தை மேற்கத்திய நாடுகளுக்குச் செய்தார். 75 நாள்களில் 12 ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றார். 1979 இல் அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் அவரது முதல் பயணம் இருந்தது.

ஆன்மீகக் குருவான அவர் அழைப்பின் பேரில் மட்டுமே இடங்களுக்குச் செல்கிறார் என தலாய் லாமாவின் அலுவலக அதிகாரிகள் கூறுகின்றனர். பல்வேறு மத, சமூக மற்றும் கலாச்சார நிகழ்வுகளுக்கான அழைப்புகளும் இதில் அடங்கும்.

மேலும் அவர் அமைதி, அகிம்சை, சுற்றுச்சூழல், மனித விழுமியங்கள் மற்றும் பௌத்தத்தை மேம்படுத்துதல் குறித்துப் பேசுவதற்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதை விரும்புகிறார்.

தலாய் லாமா என்றால் யார் அல்லது என்ன?

அவரது அலுவலக வலைத்தளத்தின் படி, தலாய் லாமாக்கள் இரக்கத்தின் போதிசத்வா மற்றும் திபெத்தின் புரவலர் துறவியான அவலோகிதேஸ்வரா அல்லது சென்ரெஜிக்கின் வழித்தோன்றல்கள் என்று நம்பப்படுகிறது. போதிசத்துவர்கள் தங்கள் சொந்த ஞானத்தை ஒத்தி வைத்து, மனிதகுலத்திற்கு சேவை செய்வதற்காக மறுபிறவி எடுக்கத் தேர்ந்தெடுத்த அறிவொளி பெற்றவர்கள் என்று நம்பப்படுகிறது.

1959 இல் சீனப் படைகள் லாசாவைக் கைப்பற்றியபோது, தனது ஆதரவாளர்கள் பலருடன் சேர்ந்து தனது இமயமலைத் தாயகத்திலிருந்து வெளியேறி இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள தற்போதைய தலாய் லாமா, மூன்று கடமைகளை நம்புகிறார்: உண்மையான மகிழ்ச்சியின் ஆதாரமாக உள் மதிப்புகளை மேம்படுத்துவது., இந்தியாவில் எடுத்துக்காட்டப்பட்டபடி மதங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை வளர்ப்பது மற்றும் திபெத்தின் மொழி, கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது என்பவை அவை.

அவர் ஒரு ‘நடுத்தர வழி’ அணுகுமுறையை நம்புகிறார், அதாவது முழுமையான சுதந்திரத்தை விட திபெத்திற்கு அதிக சுயாட்சி.

பெய்ஜிங் தலாய் லாமாவை ஓர் ஆபத்தான பிளவுவாதி அல்லது பிரிவினைவாதியாகக் கருதுகிறது, மேலும் அவருடன் எந்த நிகழ்விலும் முகம் கொடுக்க அது தயாரில்லை.

ஜோர்ஜ் எச்.டபிள்யூ. புஷ் (1991), பாரக் ஒபாமா, பில் கிளிண்டன், ஜோர்ஜ் டபிள்யூ புஷ் உட்பட அனைத்து அமெரிக்க அதிபர்களையும் நான்கு முறை தலாய் லாமா சந்தித்துள்ளார் என ஆன்மீகத் தலைவரின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு முறையும் சந்திப்பு சீன அரசாங்கத்திடம் இருந்து கடுமையான எதிர்வினையைத் தூண்டின என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய 14 ஆவது தலாய் லாமா ஜூலை 6, 1935 அன்று திபெத்தின் தொலைதூர அம்டோ பகுதியில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தார்.

(மூலம்:ஐ.ஏ.என்.எஸ்.)



# ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் எந்தப் பிரச்சினைகளும் கிடையாதாம்!



## நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில், தொடர்புகள் இல்லை என்பதை காணக் கூடியதாக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் அவ்வப்போது தனித்தனியாக அமைச்சர்களையும், அதிகாரிகளையும் அழைத்து பேச்சு நடத்தும் விதத்திலேயே இவர்களுக்கு இடையில் தொடர்பு இல்லை என்பது தெளிவாகியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் பதவியை பெற்றுக்கொண்டு கட்சி சார்பற்ற அரசாங்கத்தை அமைக்க அழைப்பு விடுத்தார்.

கட்சி சார்பற்ற அரசாங்கத்தால், பிரச்சினைகள் தீராது என்பதால், சர்வக்கட்சி அரசாங்கத்தை அமைத்து, சர்வதேசத்தின் உதவியைப் பெற்று நாட்டை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்குமாறு பிரதமருக்கு அறிவித்தோம் எனவும் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். சில தீர்மானங்களையும் முடிவுகளையும் எடுக்கும் பேச்சுகளை பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் தனித்தனியாக கூட்டியிருந்ததாக அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. இதனால், பிரதமரும் ஜனாதிபதியும் இணக்கப்பாட்டுடன் வேலை செய்கின்றனரா என்பது கேள்விக்குரியதாக இருப்பதாக எதிர்க்கட்சியின் அரசியல்வாதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் முன்னாள் ஜனாதிபதி வெளியிட்டிருந்த கருத்து தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேனவுக்கு எவரோ தவறான தகவலை வழங்கியுள்ளதாகக் கூறியுள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் மிக சிறப்பாக கலந்துரையாடி பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசாங்கம் சம்பந்தமாக நம்பிக்கையான நிலைமை இருப்பதாகவும் நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் விநியோகம் 23 முதல் வழமைக்கு!

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு



எதிர்வரும் 3 நாள்களுக்கு (20, 21, 22) எரிபொருள் வரிசையில் நிற்க வேண்டாம் என பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விநியோகம் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் வழமைக்கு கொண்டுவரப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனியார் பயணிகள் பஸ்கள் மற்றும் பாடசாலை போக்குவரத்து சேவைகளுக்கு நேற்று முதல் 24 மணிநேரமும் இலங்கை போக்குவரத்து சபை டிப்போ ஊடாக எரிபொருளை வழங்குமாறும் ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு செல்ல வேண்டாம் எனவும் எரிசக்தி அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் 23 ஆம் திகதிக்கு பின்னர் மூடப்படும்?

சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு பின்னர் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கச்சா எண்ணெய் கப்பலை நாட்டுக்குக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமை காரணமாகவே இந்த அபாயம் ஏற்பட்டுள்ளது.

கச்சா எண்ணெய் கப்பலை விரைவில் கொண்டுவர நடவடிக்கை எடுக்காவிட்டால், சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு பல நெருக்கடிகளை சந்திக்க நேரிடும் எனவும் பெற்றோலிய பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் அசோக ரன்வல தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளதால், அநாவசியமாக எரிபொருள் சேகரிப்பதைத் தவிர்க்குமாறு அனைத்து மக்களிடமும் கோரிக்கை விடுப்பதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கத்தின் உப தலைவர் குசும் சந்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் உள்ள மின்பிறப்பாக்கி இயந்திரம் ஒன்று சனிக்கிழமை முதல் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. அவசர பராமரிப்பு பணிகள் காரணமாகவே மின்பிறப்பாக்கி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக மின்பிறப்பாக்கியில் சுமார் 75நாள்களுக்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்படாது.

இதனால் தேசிய மின்வாரியத்தின் திறன் 45 சதவீதத்தில் இருந்து சுமார் 30 சதவீதமாக குறைவடையவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நீர் மின்சாரம் மற்றும் அனல் மின் நிலையங்கள் மூலம் மின் உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# 3 எரிபொருள் தாங்கி ஊர்திகளின் அனுமதிப்பத்திரங்கள் இரத்து

சட்டவிரோதமான முறையில் எரிபொருளை விநியோகித்த இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் எல்.ஐ.ஓ.சி ஆகிய நிறுவனங்களால் உரிமம் பெற்ற மூன்று எரிபொருள் வாகனங்களின் போக்குவரத்து உரிமங்கள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இதனை தெரிவித்துள்ளார். அத்துடன், குறித்த எரிபொருள் வாகனங்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் சட்டவிரோதமான முறையில் எரிபொருள் விநியோகத்தில் ஈடுபட்டவர்களை காணொலி மூலம் தமது கவனத்துக்குக் கொண்டுவந்தமைக்கு எரிசக்தி அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார்;.

# எரிபொருள்களின் தட்டுப்பாட்டினால் கடற்றொழிலாளர் வாழ்வாதாரம் பாதிப்பு

திருகோணமலை கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரிதாக பாதிப்படைந்துள்ளதாகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாட்டால் கடல் தொழிலுக்குச் செல்வதில் கடற்றொழிலாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

திருகோணமலை – திருக்கடலூர், புல்மோட்டை, நிலாவெளி மற்றும் ஜமாலியா போன்ற பிரதேசங்களில் உள்ள கடற்றொழிலாளர்களின் படகுகள், வள்ளங்கள் கரையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்றொழிலாளர்கள் நீண்ட வரிசைகளில் எரிபொருளுக்காக காத்திருந்தாலும் எரிபொருளை பெற்றுக்கொள்வதில் சிரமமாக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

தங்களுக்கு எரிபொருள்களை பெற்றுக்கொள்வதற்காக மீன்பிடித்திணைக்களம் இலகுவான வழிமுறைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கடற்றொழிலாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.








தெல்லியூர் சி.ஹரிகரன்

# சரியான திட்டமிடல் இல்லாததால் எரிபொருளுக்காக மக்கள் அவதி!

## ஒழுங்குபடுத்துவாரா மாவட்ட செயலர்?

யாழ்.மாவட்டத்தில் சரியான திட்டமிடல் இல்லாமல் எரிபொருள்கள் வழங்கப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள். இது தொடர்பில் மாவட்ட செயலாளர் கவனமெடுத்து சரியான ஒரு திட்டமிடல் ஒழுங்கை வகுக்கவேண்டும்.



மாவட்ட செயலகத்தின் சரியான திட்டமிடல் இல்லாத காரணத்தால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் அரச உத்தியோகத்தர்களுமே ஆவர்.

யாழ்.மாவட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை என நான்கு ஆதார வைத்தியசாலைகளும் பிரதானமான வைத்தியசேவையை வழங்குகின்ற நிறுவனங்களாகக் காணப்படுகின்றன.


இந்த நிலையில் இந்த வைத்தியசாலையில் பிரதான உயிர்காக்கும் பணியாற்றுகின்ற வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பரிசாரகர்கள் போன்றோர் தமது போக்குவரத்துக்கு எரிபொருள் இன்மையால் மன சஞ்சலத்தால் பற்றுறுதியோடு தமது கடமை களை ஆற்றமுடியாது தவிக்கின்றனர்.

தமது வைத்தியசாலைக்கு அருகிலுள்ள குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் வழங்கப்படுகின்றது என்ற செய்தி வந்ததும் நோயாளர்களையும் கைவிட்டு சகல பணியாளர்களும் ஒரே நேரத்தில் எரிபொருள் பெறச் செல்வதால் வைத்திய விடுதிகளிலுள்ள நோயாளர்கள் பெரும் அவதிகளை எதிர்கொள்கின்றனர். இது வைத்திய நிபுணர்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றது. இந்த விடயத்தில் நாம் வைத்தியசாலை பணியாளர்களைக் குறை கூறுவதில் எந்தப் பயனும் கிடையாது. அவர்கள் தமது கடமையை முடித்துக்கொண்டு வீடு செல்லும்போது எரிபொருளைப் பெறுவோம் என்று எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்றால் அங்கு 'பெற்றோல் முடிந்துவிட்டது' என்ற பதாதையைக் கண்டு ஏமாற்றமடைகின்றனர். அதேநேரம், வைத்தியசாலைப் பணியாளர்களுக்கு என்று முன்னுரிமை அளித்து எரிபொருள் வழங்கப்பட்டாலும், முதல்நாள் இரவு தொடக்கம் எரிபொருளுக்காகக் காத்துக்கிடந்து பல மைல் தூரத்திலிருந்து மெல்ல நகர்ந்து களைத்து, வியர்த்து அருகில் வந்தவருக்கு கோபாவேசம் ஏற்பட்டு அங்குகலகம்தான்வரும். அதுதான்பல இடங்களிலும் நடைபெறுகின்றது.

இதற்கு மாவட்ட செயலரும் மாவட்ட செயலக அதிகாரிகளும்தான் திட்டமிட்டு உரிய முறையைப் பின்பற்றவேண்டும். இவர்களின் இந்த முறையான திட்டமிடல் இன்மையால் யாழ்.மாவட்டமே பாதிப்புறுகின்றது. வைத்தியசாலை உத்தியோகத்தர் பெற்றோலுக்கு அலைவதால் வைத்தியசாலை பாதிப்படைகின்றது. நோயாளர்கள் பாதிப்படைகின்றார்கள். தூர இடங்களுக்கு கடமைக்குச் செல்லும் ஏனைய அரச உத்தியோகத்தர்கள் பாதிப்படைகின்றார்கள்.

திட்டமிடல் இன்றி எரிபொருள் வழங்குவதால் வேலையின்றி வீடுகளில் இருப்பவர்களும் கள்ளச் சந்தை வியாபாரிகளும் மட்டுந்தான் நன்மையடைகின்றார்கள். இதனால் பதுக்கும் நிலைமையும் அதிகரிக்கின்றது. அத்தியாவசிய சேவைகளான சுகாதாரத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், மின்சார சபை, தபால் திணைக்களம், கல்வித் திணைக்களம் போன்றவற்றில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு பெற்றோல் வழங்குகின்ற நேரத்தில் போய் பலமணிநேரம் காத்துக்கிடக்க முடியாது. ஆனால் கடமைக்குச் செல்வதற்கு – மக்கள் பணி ஆற்றுவதற்கு – நோயாளர்களுக்கு சிறப்பான சேவையைவழங்குவதற்குவாகனத்துக்குளரிபொருள் அவசியம். என்ன செய்வது?

ஆகவே, இதற்கு மாவட்ட செயலகம் வழங்க



வேண்டிய ஒரே தீர்வு குடும்பப் பங்கீட்டு அட்டை போன்று எரிபொருளுக்கும் அட்டை வழங்குவதே. பங்கீட்டு அட்டையில் ஓர் அங்கத்தவர், மூன்று அங்கத்தவர்கள், ஆறு அங்கத்தவர்கள் என நிவாரணப் பொருள்களின் பெறுமதியைத் தீர்மானிப்பது போன்று எரிபொருளுக்கும் சாதாரண மக்கள், சுயதொழில், அரச உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் என வகைப்படுத்தி, அவர்களின் பணி விவரம் பணிபுரியும் இடத்துக்கும் அவர்களின் வீட்டுக்குமுரிய தூரம் போன்றவற்றுக்கேற்றால்போல் கிழமைக்கு இத்தனை லீற்றர் என எரிபொருளை வகைப்படுத்தி வழங்கவேண்டும்.

அரச உத்தியோகத்தர்களுக்கு மட்டும் 'அட்டை' முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக ஒரு தகவல். ஆனால், அது குழப்பத்தையே மேலும் அதிகரிக்கும். சகலருக்கும் அட்டைமுறை கொண்டுவரவேண்டும். அப்போதுதான் பதுக்கல்களையும் கறுப்புச் சந்தைகளையும் தவிர்க்கலாம். அந்த அட்டையில் எந்த எரிபொருள் நிரப்பு நிலையம் என்பதையும் குறிப்பிட்டு அவர்களின் தொழில் தகைமை, அவர்களின் வாகனம், வதிவிடத்துக்கும் பணியாற்றுமிடத்துக்கும் இடையிலான தூரம் போன்றவற்றை வகைப்படுத்தி எரிபொருள் அளவை நிர்ணயிக்கவேண்டும். எந்தத் தொழிலுமில்லாமல் இருப்பவர்களுக்கு 'அட்டை' தேவையில்லை என்று அர்த்தமில்லை. அவர்கள் தமது வீட்டுத் தேவையை நிறைவுசெய்யவேண்டும். பிள்ளைகளைப் பாடசாலைக்கு, தனியார் கல்வி நிலையங்களுக்கு என்று ஒவ்வொருவருக்கும் தேவைப்பாடுகள் உள்ளன. அதற்கேற்றாற்போல் அளவு வகைப்படுத்தலை வாரத்துக்கு இவ்வளவு என்று வகைப்படுத்தினால் இவ்வாறான சன நெரிசல், கறுப்புச்சந்தை என்பவற்றைத் தவிர்க்கலாம்.

கடந்த வெள்ளிக்கிழமை கூட தென்னிலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட முறுகலால் 6 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர். அன்றைய தினம் முல்லைத்தீவில் ஊடகவியலாளர்மீது தாக்குதல் முயற்சி இடம்பெற்றது. அநுராதபுரத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரின் வீட்டை அண்மையில் தீயிட்டுக் கொளுத்தியுள்ளார்கள். வரிசையில் காத்திருந்த பலபேர் உயிரிழந்துள்ளார்கள். யாழ்.மாவட்டத்தில் இவ்வாறான துன்பியல்புகள் அரங்கேறுவதற்கு முன்னர் ஏனைய மாவட்டங்களுக்கு வழிகாட்டியாக – சிறந்த நிர்வாகத் திறமையுடைய மாவட்டமாக – யாழ்ப்பாணத்தை உதாரணப்படுத்துவதற்கு எமது மாவட்ட செயலகம் சரியான திட்டமிடலை வகுத்துச் செயற்படுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.!

# திருட்டு பொழுதுபோக்கு வணிக மெய்நிகர் தளம்

## நுட்பியல் அவத்தை

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)




நுட்பியல் அவத்தைத் தொடரில் சென்ற வாரம் மெய்நிகர் பொழுது போக்கு வணிகம் பற்றிப்பார்த்திருந்தோம். அதில் சினிமாப்படங்கள் தொலைக்காட்சித் தொடர்களுக்கான மெய்நிகர் தளம் பற்றிப்பேசியிருந்தோம். அதனை வாசித்த பலர் மேலும் பொழுது போக்குத் தளங்களை அறிமுகம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். அதே வேளை வணிகரீதியான பொழுது போக்கு தளங்களுக்கு சவாலாக இருக்கின்ற தமிழ்கண் மற்றும் தமிழ்ராக்கர்ஸ் பற்றியும் அறியத் தர முடியுமா? என்று கேட்டார்கள். மேலும்சில பொழுதுபோக்குவணிகத்தளங்கள்பற்றிப்பார்ப்பதற்கு முன்னர் வணிக பொழுது போக்கு மெய்நிகர் தளங்களுக்கும் தமிழ்சினிமா துறைக்கும் சவாலாகவுள்ள தமிழ்கண் மற்றும் தமிழ்ராக்கர்ஸ் பற்றிப்பார்க்கலாம்.

தமிழ் கண் மற்றும் தமிழ்ராக்கர்ஸ் என்பது சினிமாப்படங்களை வெளியிடுகின்ற ஒரு இணையத் தளம். இந்தஇணையதளம்திருட்டுஉள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது என்ற குற்றம்சாட்டப்படுகிறது. தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி படங்களை இதில் பதிவேற்றியுள்ளார்கள். அவற்றைப் பார்க்கலாம பதி




விறக்கலாம். திரைப்படங்களுடன், பல தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்பட mp3 பாடல்களும் இந்த இணையதளத்தில் கிடைக்கின்றன. இந்த இணையதளத்தை எவ்வளவு முயற்சி செய்தாலும் தடைசெய்ய முடியவில்லை.

தமிழ்கண் மற்றும் தமிழ்ராக்கர்ஸ் இணைய தளத்தில் அனைத்து வகையான திரைப்படங்களும் பதிவிறக்கம் செய்யக் கிடைப்பதால், பொழுதுபோக்கு மெய்நிகர் வணிகத்திற்கு சவாலாகவுள்ளது எனலாம். இங்கு முக்கியமானது திரைப்படத்தை பதிவிறக்கம் செய்ய பணம் எதுவும் செலுத்த தேவையில்லை மற்றும் சந்தா தேவையில்லை என்பதாகும்.

இது ஒரு சட்டவிரோத இணையத்தள வசதியெனலாம். இந்தச்செயலில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின் பிடியில் சிக்காமல் இருக்க அவர்கள் அடிக்கடி சர்வர்கள் மற்றும் டொமைனை மாற்றுகிறார்கள். இதனால் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. புதிய தமிழ்ப்படங்கள் அதிகசெலவில் தயாரித்து வெளியிட்டால் அது எவ்வளவு பெரிய ஹீரோ நடித்திருந்தாலும் அடுத்த சில மணி நேரத்தில் இந்த இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றது.

இதனால் சினிமா தயாரிப்பாளர்கள் மட்டுமின்றி ஒட்டுமொத்த திரையுலகமே பாதிக்கப்படுகிறது. வரி வருவாயையும் அரசு இழக்கிறது.

இவர்களை கட்டுப்படுத்த இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்தாலும், சட்ட விரோதமாக செயல்படுவது தொடர்கிறது. டிஜிற்றல் திரைப் படங்கள், பிக் பாஸ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், டப்பிங் படங்கள் அனைத்தும் இந்த இணையதளத்தில் திருட்டுத்தனமாக பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

கூகுள் 2019 அறிக்கையின்படி, தமிழ் திரைப்பட பதிவிறக்கத்திற்காக TamilGun என்ற வார்த்தை 3 மில்லியன் முதல் 4 மில்லியன் முறை தேடப்பட்டது. இந்த தளம் எவ்வளவு வேகமாக வளர்ந்து வருகிறது என்பதை இதிலிருந்து ஊகிக்க முடியும். ஒவ்வொரு மாதமும், மில்லியன் கணக்கான மக்கள் தமிழ் கண்ணில் திரைப்படங்களைத் தேடுகிறார்கள்.

இந்தத் தளத்தின் டொமைன் அடிக்கடி மாற்றப்படுவதன் மூலம் இதன் இருப்பு தக்கவைக்கப்படுகின்றது.

இந்தியாவில் திரைப்பட திருட்டு என்பது ஒரு பெரிய பிரச்சினை, இது படம் எடுக்கும் நபர்களுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்திற்கும் நட்டத்தை ஏற்படுத்துகிறது. இந்தியத் திரையுலகின் மிகப் பெரிய பிரச்சினை திருட்டு. அரசாங்கத்தின் அனைத்து முயற்சிகளையும் மீறி, இந்த இணையதளங்கள் மீண்டும் இயங்குகின்றன.

தமிழ்கண் மற்றும் தமிழ்ரொக்கேர்ஸ் இந்த இரண்டும் டொமைன்களும் ஒரே டேட்டாவைக் கொண்டிருக்கின்றன, இதில் எந்த டொமைனைத் தேடினால் அல்லது திறந்தால், அது ஒரே இணைய தளத்திற்கே செல்லும்.

தமிழ்கண் இணையதளத்தில் உள்ள அனைத்து திரைப்படங்களும் வெளியீட்டு உரிமை பெறப்பட்டவையல்ல அவை திருட்டு பதிப்பில் உள்ளன. இந்தத் தளத்தின் பல டொமைன்கள் திருட்டு இணைய தளங்களைக் கொண்டிருப்பதற்காக இந்திய அரசால் தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால் புதிய டொமைன் நீடிப்புடன் இந்த இணையதளம் மீண்டும் இயங்குகிறது.

தமிழ்கண் மற்றும் தமிழ்ராக்கர்ஸ் இணைய தளம் திரைப்படங்கள், வலைத் தொடர்கள், தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் பிற பொழுதுபோக்கு உள்ளடக்கங்களின் பல தொகுப்புகளைக் கொண்டுள்ளன. அனைத்து உள்ளடக்கங்களும் வெவ்வேறு சேமிப்பக அளவுகளில் கிடைக்கின்றன, அதில் இருந்து விருப்பப்படி பதிவிறக்குவதற்கு மிகவும் பொருத்தமான ஒன்றை தேர்வு செய்யலாம். குறிப்பாக, 300Mp,600 MP, 800Mp ஆகிய அளவுகளில் தர விறக்கம் செய்யலாம்.

தமிழ்கண் இணையதளத்தில் டெலிகிராம் சேனலும் உள்ளது, அதில் அனைத்து திரைப்படங்களும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. ஆகவே டெலிகிராம் சேனலில் சேர்ந்து, திரைப்படங்களை நேரடியாகப் பதிவிறக்கம் செய்யலாம். இதனுடன், அந்த டெலிகிராம் சனலில் அந்த வலைத்தளத்தின் சமீபத்திய URL ஐப் பெறலாம். இதனால் தமிழ்கன் வலைத் தளத்தை மிக எளிதாக அடையமுடியும்.

தமிழ்ராக்கர்ஸ் 2011 இல் ஒரு சிறிய நண்பர்களால்




தொடங்கப்பட்டது என அறியமுடிகிறது. சில ஆண்டுகளில் அதிவேகமாக வளர்ந்துள்ளது. அவர்களது தளங்கள் ரஷ்யா, ருமேனியா நாடுகளில் ஹோஸ்ட் செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். அவர்களின் டி. என். எஸ் மற்றும் பிற தகவல்கள் பாதுகாக்கப்படுகின்றன.

தமிழ்ராக்கர்ஸ் மற்றும் தமிழ்கண் ஒரு பெரிய வலையமைப்பைக் கொண்டுள்ளனர், அவர்கள் ஒரு இணைப்பை வெளியிட்டவுடன், அதை காட்டுத்தீ போல பரப்பும் உறுப்பினர்கள் உள்ளனர்.

அமேசான் பிரைம் என்ற பொழுதுபோக்கு வணிகத்தளத்தில் வெளியிடப்படும் திரைப்படம் சில நிமிடங்களில் தமிழ்ராக்கர்ஸ் மற்றும் தமிழ் கண். தளத்தில் வந்துவிடும். இவ்வாறே அண்மையில் வெளிவந்த தமிழ் திரைப்படமான 'பொன்மகள் வந்தால்' என்ற திரைப்படம் திருடப்பட்டு வெளிவந்ததாக அறிய முடிகிறது.

ஆகவே இந்த நுட்பியல் அவத்தை இது ஒரு புதிய கவலை, புதிய சவால்.

திரைப்படங்கள் வெளியிடப்படும் இணைப்பை ஹோஸ்ட் செய்யும் சர்வர்களை அடையாளம் கண்டு அறிவிப்புகளை அனுப்புவதன் மூலம் அவற்றை தடைசெய்யலாம். அதற்கு எடுத்துக் கொள்ளும் நேரத்திற்குள் சர்வர்கள் வெவ்வேறு நாடுகளில் இருப்பதால், நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் அதைப் பதிவிறக்கி விடுவார்கள்.

மேலும், இந்த இணையத்தளங்கள் சாதாரண பொதுமக்களுக்காகத் தான் படங்களை திருடி இலவசமாக வெளியிடுவதாகக் கூறுகின்றார்கள். அதாவது பொதுசேவை செய்வதுபோல் காட்டிக்கொள்கிறார்கள். இருந்தாலும் இதில் அவர்களுக்கு பெரும் வருவாய் உள்ளது என்பதே உண்மை.

உரிமம் இல்லாத இணையத்தள பதிவிறக்கங்கள் 'திருட்டு' என்று பொருள்படும் அதனால் இந்தத் தளங்கள் மூலம் திரைப்படங்களைப் பதிவிறக்கக்கூடாது. இருப்பினும் இது இன்று தமிழ் திரைப்படப் பொழுதுபோக்கை மாற்றிவரும் ஒரு ஒரு நுட்பியல் அவத்தையாக மாறிவருகின்றதை அவதானிக்கலாம்.

# பொருளாதாரப் பேரழிவுகளுக்குப் பின்னால் பொறுப்புக்கூறலை தவிர்க்க ஒளியும் இலங்கை!

## நாடுகடந்த தமிழீழ அரசு ஐ.நாவுக்கு எச்சரிக்கை



ஜெனிவா – ஐ.நா. மனித உரிமைச் பேரவையின் 50 ஆவது கூட்டத் தொடரில், சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், ஜூன் 13, 2022 அன்று சபையில் கூறியவை, தமிழ்மக்களுக்கு எதிராக சிறிலங்காவால் இழைக்கப்பட்ட கொடுங்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவதைத் தவிர்ப்பதற்காக, சபையை தவறாக வழிநடத்துவதை நோக்கமாகக் கொண்டது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை எச்சரித்துள்ளது.

தமிழ்மக்களுக்குஎதிராகஇழைக்கப்பட்டஇனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறத் தவறியதை மறைக்க, சிறிலங்கா தனது தற்போதைய பொருளாதாரப் பேரழிவை முன்னிறுத்துவதை ஐ.நா. பேரவையும், சர்வதேச சமூகமும் அனுமதிக்க கூடாது வலியுறுத்துகின்றோம் என பிரதமர் வி.உருத்திரகுமாரன் கோரியுள்ளார்.

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸின் உரைக்கு பதிலுரையாக விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன், பாரிய இராணுவச் செலவீனங்கள், 21 ஆவது திருத்தச் சட்ட மாயை, சிங்கள அரசியல் சமூகத்தின் இனவாதம், மோசமான பயங்கரவாதத் தடுப்புச்சட்டம், மக்களுக்குஎதிராகதொடரும்கட்டமைக்கப்பட்டஇனப்படுகொலை உட்பட சிறிலங்காவின் பல விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளதோடு, பொறுப்புக்கூறலுக்கு சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு எனத் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் இடம்பெற்றுவரும் போராட்டத்திற்கு கிடைத்த எதிர்வினைகளையும், வடக்கு கிழக்கு பகுதியில் இடம் பெற்று வரும் போராட்டங்களுக்கு கிடைத்த எதிர்வினைகளையும் ஒப்பிட்டு நோக்கில் சிங்கள அரசியல் சமூகத்தில் வேரூன்றிய இனவாதத்தை வெளிப்படுத்துகின்றன.

### பாரிய இராணுவச் செலவீனங்கள்

சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பேரழிவிற்கு முதன்மையான காரணங்களில் ஒன்றாக, தமிழர்களை அடிமைகளாக வைத்திருக்கும் ஒரே நோக்கத்துக்காக தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிலைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள பாரிய இராணுவமும், அதன் செலவீனங்களுமே மிகப்பெரிய நிதிச்சுமையாகும். தமிழர் தாயகத்தில் யுத்தம் முடிவடைந்து 13 வருடங்கள் கடந்த பின்னரும், தமிழர் தாயகத்தில் 6 பொதுமக்களுக்கு ஓர் இராணுவ வீரர் நிலைநிறுத்தப்பட்டுள்ளார் என அமெரிக்காவின் கலிபோர்னியாவை தளமாகக் கொண்ட ஒக்லாண்ட நிறுவகம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

### 21 ஆவது திருத்தச் சட்ட மாயை

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் தனது உரையில், சிறிலங்காவின் அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பாக ஒரு மாயக் கருத்தை சர்வதேச சமூகத்தை நோக்கி முன்வைத்துள்ளார். இது 'நாடாளுமன்றம், சுயாதீன நிறுவனங்கள், நிதி பரிவர்த்தனை மற்றும் அதிகாரங்களின் மீதான சமநிலைகளை உறுதிப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது' என பாசாங்குத்தனமாக குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் சிறிலங்கா அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் உண்மையில் ஜனாதிபதியின் அதிகாரங்களைச் சரிபார்க்கும் வகையில் செயற்படவில்லை. ஜனாதிபதி தொடர்ந்து சில அமைச்சுக்களை தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கலாம் என்பதோடு நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கும் அதிகாரமும் காணப்படுகின்றது. குறிப்பாக 'ஜனநாயக விழுமியங்களை ஒருங்கிணைக்க' இலங்கை அரசியல் சமூகமும் அதன் நாடாளுமன்றமும் இனரீதியாக நடுநிலையாக இருக்க வேண்டும். ஜனாதிபதி அதிகாரத்தை சமநிலைப்படுத்த நாடாளுமன்றத்துக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குவதை சிங்கள அரசியல் சமூகத்தில் உள்ள பௌத்த இனவாதத்தை மாற்றாது. சிறிலங்கா அரசு ஒரு சிங்கள பௌத்த அடிப்படைவாத அரசாகவே உள்ளது. 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் அது அவ்வாறே தொடரும்.

### சிங்கள அரசியல் சமூகத்தின் இனவாதம்

கோட்டா கோ கம உட்பட பெரும்பாலான சிங்கள ஆர்ப்பாட்டக்காரர்களால் தெற்கில் பொருளாதார முறைகேடுகளுக்கு எதிராக வெடித்த போராட்டங்களை, சிறிலங்கா அரசாங்கம் கையாண்ட விதம் அரசாங்கம் மற்றும் அரச கட்டமைப்புக்கள் அப்பட்டமான இனவாதத்தைக் காட்டுகிறது. வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்ப் போராட்டக்காரர்களுக்கு வழமையாக நிகழ்வதற்கு மாறாக, தெற்கில் ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவரை பொலிஸார் சுட்டுக் கொன்றபோது, ரம்புக்கனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டார். காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாக்கப்பட்ட போது, எம்.பிக்களாக இருந்த போதிலும் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சிங்கள வழக்கறிஞர்கள், பொலிஸாராலும் தாக்கப்படவில்லை. போராட்டக்காரர்களுக்கு முன்னால் நின்றனர், அதேசமயம் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்திலோ அல்லது மாவீரர் நாளிலோ போராட்டக்காரர்கள் தாக்கப்படும்போது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வரவில்லை. போராட்ட செய்திகளை சேகரிக்கும் சிங்கள ஊடகவியலாளர்கள் தாக்கப்படவில்லை மற்றும் அவர்களின் கமெராக்கள் பலவந்தமாக கைப்பற்றப்படவில்லை, அதேசமயம் வலிந்து காணாமல் போனவர்களின் குடும்பங்கள் போன்ற போராட்ட செய்திகளை சேகரிக்கும் தமிழ் ஊடகவியலாளர்கள் சிறிலங்கா பொலிஸாரால் துன்புறுத்தப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். எனவே, இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் நடைபெறும் போராட்டங்களைக் கையாளும் விதத்தில் இருந்து தென்னிலங்கைப் போராட்டங்களைக் கையாளும் விதத்தின் மூலம் அரசாங்கமும், அதன் சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவினரும், சிங்கள சிவில் சமூகமும் தமது இனவாதத்தை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர்.

### மோசமான பயங்கரவாதத் தடுப்புச்சட்டம்

நாகரிக நாடுகளின் மீதான அசிங்கமான கறை என சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணையத்தால் வகைப்படுத்தப்பட்ட, சிறிலங்காவின் மோசமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வது தொடர்பாகவும் வெளிவிவகார அமைச்சர் பேசியுள்ளார். பல்வேறு சர்வதேச மனித உரிமை அமைப்புகள், தமிழ்மக்கள் கோரியது போல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமே தவிர, திருத்தம் செய்யப்படவேண்டியதில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 22 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார். இந்த 22 பேர் பல வருடங்கள் சிறைவாசத்திற்குப் பிறகு விடுவிக்கப்பட்டனர் என்பதோடு சித்திரவதை, தனிமைப்படுத்தல் போன்ற கொடுமைகளை அனுபவித்தனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இன்னும் பலரும் தொடர்ந்தும் சிறைகளில் உள்ளனர்.

மாவீரர் நாள் அல்லது முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் ஒன்றுகூடியதற்காக தமிழர்கள் இந்த நிகழ்வுகளை செய்தி வெளியிட்டதற்காக கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் அனைவருமே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழே கைது செய்யப்பட்டமையையும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. ஆனால் தென்னிலங்கையில் நடந்த போராட்டங்களில் இடம்பெற்ற கைதுகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் செய்யப்படவில்லை. அவர்கள் அவசர கால விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டனர். பின்னர் அந்த விதிகள் காலாவதியாகிவிடப்பட்டன. அதேசமயம் 1979 ஆம் ஆண்டு முதல் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறையில் இருந்து வருகின்றது. கைது செய்யப்பட்ட தமிழர்கள் அனைவரும் இந்த சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டனர். இன்றும் கூட இந்தச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்படுகின்றனர். இதே போல் 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டு வெடிப்புகளுக்குப் பிறகு முஸ்லிம்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் தெற்கில் போராட்டம் நடத்திய சிங்களவர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை. இதனால்தான் சித்திரவதை தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பெல் எமர்சன் தனது அறிக்கையொன்றில் 'பயங்கரவாத தடுப்புச் சட்டம் தமிழர்கள் மீதே கூடியளவு தாக்கத்தை ஏற்படுத்துகிறது' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

### பொய்யான கூற்றுக்கு பொறுப்புக் கூறவேண்டிய சிறிலங்கா

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் சபைக்கு அளித்த அறிக்கையில், 'காணாமல் போனோர் அலுவலகத்தின் செயல்முறையின் ஒரு பகுதியாக விசாரணைக் குழுவிற்கு அழைக்கப்பட்ட 83வீத நபர்களை சந்தித்துள்ளது' என்றும் கூறியுள்ளார். ஆனால், 'காணாமல் போனவர்கள் அனைவரும் இறந்துவிட்டார்கள்' என்று சிறிலங்காவின் ஜனாதிபதியே குறிப்பிட்டுள்ளார். பிபிசியின் ஜனவரி 20, 2020 செய்தியறிக்கையின் படி : 'சிறிலங்காவில் போரின் போது காணாமல் போன 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இறந்துவிட்டனர் என சிறிலங்காவின் ஜனாதிபதி முதன்முறையாக ஒப்புக்கொண்டுள்ளார். தலைநகர் கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலக செய்திக்குறிப்பில் காணாமல் போனவர்களுக்கு இறப்பு சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த செய்தி நியூயோர்க் டைம்ஸ் மற்றும் தி இந்து உட்பட பல சர்வதேச ஊடகங்களிலும் பரவலாக வெளியிடப்பட்டது. இருந்த போதிலும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் இந்த மோசடிக் கூற்றை தொடர்ந்தும் செய்து வருகின்றார், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான தீர்வைக் காண, காணாமல் போனோர் அலுவலகம் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது என்ற பொய்யான கூற்றுக்கு சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சரை பொறுப்புக்கூறுமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உறுப்பினர்கள் மற்றும் பேரவையின் தலைவர் கோரவேண்டுமென நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கேட்டுக் கொள்கிறது.

மேலும், வெளிவிவகார அமைச்சர் தனது உரையில், இழப்பீடு அலுவலகத்துக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 759 மில்லியனுடன் கூடுதலாக 53 மில்லியன் இலங்கை ரூபாக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். நிதிநிவாரணம் மூலம் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களையும் இழப்புக்களை ஈடுசெய்ய முடியாது என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஐரோப்பிய நீதிமன்றங்கள் மற்றும் அமெரிக்க பிராந்திய நீதிமன்றங்களின் கூற்றுப்படி 'பயனுள்ள தீர்வு' என்பது முழுமையான பயனுள்ள விசாரணை மற்றும் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை உள்ளடக்கியது எனத் தெளிவாக குறிப்பிட்டுள்ளது. வாழ்வின் இழப்புக்களை பணக்கையேடு மட்டும் தணிக்காது.

வெளிவிவகார அமைச்சர் தனது உரையில், 'ஐக்கிய நாடுகளின் ஒழுங்குமுறை எண்.1 இன் கீழ் 2012 ஆம் ஆண்டு தடைவிதிக்கப்பட்ட தனிநபர்கள், அமைப்புக்கள் தொடர்பில் மதிப்பாய்வு செய்யப்படுவதோடு, தற்போது 318 தனிநபர்கள் மற்றும் 4 அமைப்புக்கள் தடைப்பட்டியலில் இருந்து நீக்க முன்மொழியப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

### தொடரும் வேடிக்கை விளையாட்டு

சிறிலங்காவின் இந்த நடத்தை எங்கள் தொடர்பான தொடர்ச்சியான வேடிக்கை விளையாட்டாகும். 2014 ஆண்டில் சிறிலங்கா அரசாங்கம், 424 தனிநபர்கள் மற்றும் 16 அமைப்புக்களை 'பயங்கரவாத பட்டியலிட்டு' தடைவித்தது. 2015 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம் மீண்டும் வேடிக்கை விளையாட்டாக 8 அமைப்புக்களையும், 259 தனிபர்களையும் புனிதர்களாக்கி தனது தடைப் பட்டியலில் இருந்து நீக்கியது. திரும்பவும் 2021 இல் புதிய அரசாங்கம் மீண்டும் தனது வேடிக்கைவிளையாட்டைக்காட்டியது.380தனிநபர்களையும் மற்றும் 7 அமைப்புக்களையும் பயங்கரவாதத் தடைப்பட்டியலில் இட்டுக்கொண்டது. ஐ.நா. மனிதஉரிமைப் பேரவையில் சிறிலங்கா வெளிவிவார அமைச்சரின் சமீபத்திய அறிக்கை இந்த எண்ணிக்கை வேடிக்கை விளையாட்டை மீளவும், தொடர்வதை வெளிக்காட்டுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த எண்ணிக்கை வேடிக்கை விளையாட்டு, 2012 ஆம் ஆண்டு – ஐ.நா. ஒழுங்குமுறை இலக்கம் 1ஐ சிறிலங்கா துஷ்பிரயோகம் செய்வதை நிரூபிக்கின்றது. சிறிலங்கா அரசாங்கத்தின் இந்த நடத்தை ஐ.நாவின் நம்பகத்தன்மையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. துரதிஷ்டவசமாக, 13 வருடங்களுக்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த பின்னர் எந்தவொரு வன்முறைச் சம்பவமும் இடம் பெறாத போதிலும், சில வெளிநாட்டு சக்திகளால் விடுதலைப் புலிகளை 'பயங்கரவாத அமைப்பாக' தொடர்ந்து பெயரிடுவது, சிறிலங்கா அரசாங்கத்தை இந்த வேடிக்கை விளையாட்டை தொடர்ந்து விளையாடச் செய்துள்ளது.

### தமிழ் மக்களுக்கு எதிராக தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை

தமிழர் பகுதிகளில் சிறிலங்காவின் ஆயுதப் படைகளின் பாரிய இராணுவ பிரசன்னம் தமிழ் மக்களின் அடையாளத்தை அழிப்பதற்கும், தமிழ்மக்களின் மனித உரிமை மீறல்களுக்கும் தொடர்ந்து பங்களிக்கிறது. உதாரணமாக, சமீபத்தில் தமிழர்களின் பண்டைய வழிபாட்டுத்தளத்தை ஆக்கிரமித்து அபகரித்து புத்த விகாரையொன்றைக் கட்டுவதற்கு எதிராக, அமைதி வழியில் போராடிய தமிழ்மக்கள் மீது இராணுவமும் பொலிஸும் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் காயமடைந்துள்ளார். நீதிமன்ற உத்தரவையும் மீறியே புத்த விகாரையை கட்ட முனைந்துள்ளதோடு, இது தமிழர்கள் மீது தொடரும் பண்பாட்டு இன அழிப்பாகவுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# பீரிஸின் உருவப்பொம்மை யாழ்ப்பாணத்தில் எரிப்பு!





வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் உருவப்பொம்மையை எரித்து யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகரின் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) போராட்டம் இடம்பெற்றது.

அரசாங்கம் தவறான கருத்துக்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்துள்ளதாகக் கூறி அதற்கு எதிராக நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக ஒன்று கூடிய போராட்டக்காரர்கள் பேரணியாக ஐ.நா.அலுவலகத்துக்கு வந்தடைந்தனர்.

அதன் போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தெரிவித்துள்ள கருத்துக்களை கண்டித்து அதற்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

மேலும் அமைச்சரின் உருவ பொம்மையை தீயிட்டுக் கொளுத்திய போராட்டக்காரர்கள் ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்தனர்.

போராட்டத்தில் அரசியல் கைதிகளின் உறவுகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூகத்தினர், அரசியல் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## கல்வியங்காட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழப்பம்!



யாழ்ப்பாணம் – கல்வியங்காட்டு சந்தை தொகுதியுடன் காணப்படும் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சனிக்கிழமை பெற்றோல் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனை அடுத்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை முதல் பெற்றோலுக்காக சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்துக்கும் அதிகமான நீண்ட வரிசையில் மக்கள் வாகனங்களுடன் காத்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.45 மணியளவிலேயே எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குப் பெற்றோல் தாங்கி வந்திருந்தது.

அதனை க.பொ.த.சாதாரண தர பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணியில் ஈடுபட்டவர்களுக்கு வழங்குமாறு தமக்கு அறிவுறுத்தல் கிடைத்ததாக எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதனால் பல மணி நேரம் நீண்ட வரிசையில் காத்திருந்தவர்கள் குழப்பம் அடைந்த நிலையில் அங்கு மேலதிக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் கல்வியங்காட்டு சந்தை தொகுதியுடன் காணப்படும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகம் இடை நிறுத்தப்பட்டது.

## பொருளாதாரப் ....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள சிவில் சமூகத்திடமும் மற்றும் அரசாங்கத்திலும் பௌத்த இனவாதம் ஆழவேரூன்றியுள்ள நிலையில், தமிழர்களுக்கு முன்னெப்போதையும் விட பாதுகாப்பு தேவைப்படுகிறது. தமிழர்களுக்கு எதிரான குற்றங்களுக்காக சிறிலங்கா அரசியல்வாதிகள், இராணுவத்தினர் தண்டனைகளில் இருந்து விடுபடுவதற்கு முற்றுப்புள்ளி இருந்தால் மட்டுமே பாதுகாப்பு கிடைக்கும். சிறிலங்கா அரசின் மனித உரிமை அட்டூழியங்களுக்கு முழுப் பொறுப்புக்கூறலைக் கோருவதன் மூலம் தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவர ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உதவ முடியும்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஏனைய பலதரப்பு அமைப்புக்கள் மற்றும் அரசாங்கங்கள் இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்க உதவுவதற்குத் தயாராக இருப்பதால், இராணுவத்தைக் குறைத்து தமிழர் தாயகத்திலிருந்து அகற்றுமாறு சிறிலங்கா அரசாங்கத்துக்கு முதலில் அறிவுறுத்த வேண்டும். மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு கொழும்பின் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் தங்கியிருந்து சிறிலங்காவுக்கு நிதியுதவி செய்ய பலதரப்பு நிறுவனங்களும் அரசாங்கங்களும் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்.

**சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துக**

நிறைவாக, 2021 ஜனவரி 12 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் மிச்சேல் பச்சலேற் அம்மையாரின் அறிக்கையில், சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்புமாறு விடுத்த அழைப்பையும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மீண்டும் வலியுறுத்துகிறது. ஐ.நா. மனித உரிமைகளுக்கான நான்கு முன்னாள் ஆணையாளர்கள், ஐ.நாவின் நான்கு முன்னாள் உயர் அதிகாரிகள், இலங்கைக்கு பயணம் செய்து அறிக்கைகளை எழுதிய ஐ.நாவின் ஒன்பது முன்னாள் சிறப்பு அறிக்கையாளர்கள், ஐ.நா. செயலாளர் நாயகம் குழுவின் மூன்று உறுப்பினர்கள், இலங்கை பற்றிய நிபுணர்கள் ஆகியோர் சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்புமாறு என்ற அழைப்பை விடுத்திருந்தனர்.

செப்ரெம்பர் மாதம் 46/1 தீர்மானம் காலாவதியாகும் போது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வில், பொறுப்புக்கூறல் தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்படும் என பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர் என தனது விரிவான அறிக்கையில் பிரதமர் வி. உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

## மன்னார் - நொச்சிக்குளம் இரட்டைக் கொலை; சரணடைந்த 5 சந்தேக நபர்களுக்கும் மறியல்!

மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தில் கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் 5 பேர் சனிக்கிழமை காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

இந்நிலையில், சரணடைந்த குறித்த 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை 10 ஆம் திகதி காலை மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தில் நிகழ்ந்த வாள்வெட்டு சம்பவத்தில் இரண்டு குடும்பஸ்தர்கள் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்தனர்.

குறித்த சம்பவத்தில் 40 வயதுடைய யேசுதாசன் ரோமியோ மற்றும் 33 வயதுடைய யேசுதாசன் தேவதாஸ் எனும் சகோதரர்கள் இருவரே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இந்தச் சம்பவத்தை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் கொலையுண்ட சகோதரர்கள் இருவரின் சடலங்களும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதுடன் பிரேத பரிசோதனைக்காக கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டது.

அத்துடன் மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் குறித்த சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களும், காயமடைந்தவர்களும் மன்னார் உயிலங்குளத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

## மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் அன்றாட நடவடிக்கை பாதிப்புறும் அபாயம்

எரிபொருள் நெருக்கடி காரணமாக மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக எரிபொருள் நெருக்கடி காரணமாக வைத்தியர்கள் உட்பட வைத்தியசாலை ஊழியர்கள் பணிக்குத் திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அபேக்ஷா வைத்தியசாலையின் விசேட சத்திரசிகிச்சை நிபுணர் கனிஷ்க டி சில்வா தெரிவித்துள்ளார்.

வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களுக்கான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாவிட்டால் எதிர்காலத்தில் வைத்தியசாலை செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்குமாறு கோரி கடிதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

எனினும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடிதத்தை சமர்ப்பித்து எரிபொருளை பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேசிய வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் அவசர சத்திரசிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என அதன் பணிப்பாளர் வைத்தியர் குமார விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் அவசர சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வைத்தியர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்குமாறு மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீசந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## அங்கம்-39

### தமிழ் மக்களின் தன்னிறைவுக்கான நிதர்சனங்கள்

இவைதான்தமிழ்மக்களின்அரசியல் போக்குகளானால் இந்த மக்கள் இன்றைய காலகட்டத்திலும், எதிர்காலத்திற்காகவும் அவர்கள் தாங்கள் இப்போது இருக்கும் நிலையிலிருந்து சமயோசித உத்திகளை கையாளக்கூடிய, திறமை மிக்க, கஷ்டமான நிலைமைகளைச் சமாளிக்கும் சக்தியுள்ள நம்பிக்கை வாய்ந்தவர்களாகத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.அதை எப்படிச் செய்வது என்பதில் சமூக ஆர்வலர்களும், புத்திஜீவிகளும், சமூக நலனில் அக்கறை கொண்டோரும் கவனம் கொள்ள வேண்டும். அவர்கள் மீண்டெழுந்து முன்னேறிச் செல்லத் தேவையான நம்பிக்கைகள் அவர்களுக்குத் தரப்பட வேண்டும்.

நாம் போரில், உரிமைப் போராட்டத்தில், தோற்றுப் போன மக்கள், எங்களுக்கு விடிவு வராது என்ற மனோபாவத்தில், உறவினர்களிடம் இருந்து வந்த வெளிநாட்டு பணத்திலும், நிதி உதவி நிறுவனங்களை அண்டியும் நம்பியும் வாழ்ந்தனர் நம் மக்கள். ஆனாலும், அந்த மக்களின் உந்து சக்தியான புலம்பெயர் சமூகம் தமிழ் மக்கள் தோற்றுப் போனவர்கள் அல்லர், அவர்களின் ஆயுதப்போராட்டம் மழுங்கடிக்கப்பட்டாலும், அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களையும், இனப்படுகொலைகளையும் சர்வதேசத்திற்கு எடுத்துச் சென்று, நீதிக்கு வாதாடி, அதில் உரிமைகளைப் பெறுவோம் என கிளர்ந்தெழுந்து, பரப்புரைகளில் ஈடுபட்டு, ராஜபக்சளுக்கு தலையிடி தந்து, இதுவரை சர்வதேச மனித உரிமை மன்றில் தீர்மானங்கள் ஆக்குவதற்கு உதவியுள்ளார்கள். அரசியல்வாதிகளோ தாம் ராஜதந்திர ரீதிகளில் சர்வதேச நாடுகளை அணுகி தீர்வுக்கான கட்டுமானங்களை ஏற்படுத்துவோம் என்று கூளுரைத்தார்கள். இவை இரண்டின் மூலமும் (யதார்த்தத்தில் ஐ.நாவும் சர்வதேசம் என்ற ஒன்றுதான்), நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட காலமாகலாம்.

அதற்கு இடையில் பல மாற்றங்கள் வரலாம். அவற்றில் நம்பிக்கை வைத்து முன்னேற வேண்டும். இடைப்பட்ட காலகட்டத்தில் அவர்கள் தங்கள் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை வளர்க்கப்பட வேண்டும். தன்னம்பிக்கை என்பதை சாதாரணமாக நம்பிக்கை கொள்ளுதல் என்ற அர்த்தத்தில் பார்க்கக் கூடாது. அது தன்னம்பிக்கையுடன் தங்களை வளர்த்து, தங்களது வாழ்வாதாரங்களை, நிர்வாகங்களை தாங்களே நடத்தி தன்னிறைவு காண்பது என்பது. அப்படி உருவாகும் தன்னிறைவில் – அந்தத் தன்னம்பிக்கையில் – தாங்கள் கையேந்தும் நிலையில் இல்லை என்ற மனத்திடத்தில், பேரம்பேசும் படிக்கு ஏறுவதற்கு முடியும். அதற்கு ஓர் உதாரணத்தைப்பார்க்கலாம்.

சைப்பிரஸ் தீவில் கிரீக் பேசும் மக்கள் பெரும்பான்மையாக இருந்தார்கள். அதன் தென் மாகாணங்களில் துருக்கி பேசும் துருக்கியர்கள் சிறுபான்மையில் வசித்தார்கள். ஐரோப்பாவின் ஆதரவுடன் கிரேக்கம் சைப்பிரஸை அதனது முழு நிர்வாகத்தில் கொண்டுவர துருக்கியருக்கு எதிரான பல நடவடிக்கைகளை எடுத்தனர். அவர்களுக்கு ஆதரவாகத் துருக்கி தன் படைகளை அனுப்பி தென் மாகாணங்களில் நிலைகொண்டு, சைப்ரஸின் துருக்கியர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டது. சர்வதேசத்துடன் நடந்த பேச்சுவார்த்தைகளில் பெருமளவு துருக்கிய படைகள் மீள் வாங்கப்பட்டாலும், துருக்கியின் பிரசன்னம் அங்கு உள்ளது என்பதை நினைவூட்ட காலாட் படையின் ஒரு பகுதி அங்கு நிறுத்தப்பட்டு, தென் மாகாணங்கள் சைப்ரஸ் அரசில் நம்பியிருக்காமல் துருக்கியின் ஆதரவுடன் தங்களது வாழ்வாதாரங்களை வளப்படுத்தி, தங்கள் பகுதிகளில் உள்ள துறைமுகங்களை அபிவிருத்தி செய்து, உற்பத்திகளை ஏற்றுமதி செய்து, தன்னிறைவு காண்கிறார்கள். தாங்கள் தனியாகப் பிரிய வேண்டும் என்ற அவர்களது கோரிக்கை இன்னும் உண்டு. ஆனால் இணைந்த தேசங்களாக Confederation என வாழலாம் என்ற பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. துருக்கியர்கள் தன்னிறைவில் வாழ்கின்றார்கள்.

தமிழ் மக்களின் பரிதாபம் என்னவென்றால் அவர்கள் நடத்திக்கொண்டிருந்த போராட்ட காலங்களில் பல நக்கீரன்கள் உருவாகி, போராட்டங்கள் மக்களுக்கு அனுகூலமாக எந்த பாதைகளில் செல்ல வேண்டும் என்று 'நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே' என்று வழிகாட்டிகளாக ஆகவில்லை. அப்படிக் கருத்து வேற்றுமைகளை புதிய பாதைகளுக்காகத் திறக்கவில்லை. மாறாக, திருவிளையாடல் தருமி போல பலர் குற்றம் இருந்தால் அதற்குத் தக்கபடி குறைத்துக் கொண்டு மீதியைத் தாருங்கள் என்று வழித்துணை போல நின்றார்கள்.

போருக்குப் பின்னான காலத்திலும் இதே போக்குகளினால் இளைஞர்கள் வேறுவழிகள் இன்றியோ அல்லது சுயலாபத்திற்காகவோ அல்லது சுகத்திற்காகவோ விட்டில் பூச்சிகள் போல கடல் கடந்து வெளியேற முயன்று, கைகளில் இருப்பவற்றையும் தொலைக்கிறார்கள். சம்பந்தனும் சுமந்திரனும் ஜனநாயகத்துக்கு வாதாடி, தேர்தலில் அரசை மாற்ற வழிகள் தேட, பொருளாதாரத்தில் உழன்று அத்தியாவசிய தேவைகளுக்காக மக்கள் மைல் கணக்கில், நாள் கணக்கில் கியூவில் நிற்க, பௌத்த துறவிகள், தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகள், இராணுவத்தின் உதவியுடன் குருந்தூர் மலையில் புத்தரைப் பிரதிஷ்டை செய்வதற்கு நீதிமன்ற உத்தரவையும் மதியாது வருகிறார்கள். சம்பந்தனால் என்ன செய்ய முடிகிறது?

ஆகவே பொருளாதார நெருக்கடி பௌத்த, சிங்கள பெரும்பான்மையைப் பாதிக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. மக்கள் அவற்றிலிருந்து ஒரு திசை நோக்குப் பெறவேண்டும்.

தன்னிறைவுக்கு முதல்படியாக உணவு உற்பத்தியைப் பெருக்கி, அதிலிருந்து சேமித்து, கையிருப்பு வசதிகள் பெருக வேண்டும். அடுத்து இன்றைய தொழில்நுட்பக் கலைகள் பற்றி ஆராயும் விஞ்ஞானங்களைப் பெருக்கிப் படிப்பித்து, தமிழ் பகுதிகளில் தொழில் செல்வங்களை தொழில் நுணுக்கம் தெரிந்த நிபுணர்களை அமர்த்தி நிர்வகிக்க வேண்டும். இவற்றைஏற்படுத்தநம்பிக்கையான கட்டமைப்புகளும் அவற்றுக்குத் தேவையான பொருளாதார வளங்களுக்கு புலம்பெயர் மக்களுடன் இணைந்து வழிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். விடுதலைப்புலிகளின் தரப்போடு சேர்ந்து இயங்கியவர்கள் தங்களிடம் பணம் உண்டு எனச் செய்தி தருகிறார்கள். ஆனால் அவை எங்கே, யாரின் பராமரிப்பில் உண்டு, அவை தமிழ் மக்களுக்கான பொதுச் சொத்துக்களாக உள்ளனவா என்ற விவரங்களில் தெளிவில்லை.

அவர்களிடையே யார் யாரிடம் இந்தச் சொத்துக்கள் தேங்கி உள்ளன எனக் கண்டுபிடிப்பதில் மோப்பங்கள் நடக்கின்றன. அந்தப் பணத்தைக் கொண்டு தனிப்பட்ட ரீதியில் முதலீடு செய்ய ராஜபக்சக்களுடன் நடந்த பேரங்கள் காளான்கள் போல வேரோடியும் குருவிச்சை போல படர்ந்து இருக்கின்றன. தமிழ் மக்களது மீள்கட்டமைப்புக்காக விடுதலைப் புலிகளுடன் இணைந்த சில அமைப்புக்கள் சிறிதளவான வாழ்வாதார பணிகளில் ஈடுபட்டாலும், பொருளாதாரத்தில் தன்னிறைவு காண்பதற்கான தேவையான நிதிகள் வேறு விடுதலை புலிகள் தவிர்ந்த புலம்பெயர் மக்களிடையே கூட, அவர்கள் வாழ்ந்த காலங்களில் இருந்து தேடிய சொத்துக்களாக உண்டு.

போராட்ட காலங்களிலும் அவர்கள் உதவி தந்தார்கள். இதன் பின் தங்களது குடும்பங்களுக்கு அனுப்பப்பட்டவையே முக்கியமாக வளர்ந்தது. இவர்களிடம் இருக்கக்கூடிய நிதியைப் பொதுப் பணிக்காக முதலீடு செய்யக்கூடிய முறையிலான கட்டமைப்புக்கள் உருவாக்கி, அவை பொறுப்பான காரணங்கள் காட்டி விவரித்து, வரவு – செலவுகளைத் தந்து, தணிக்கைக்கு உள்ளாகிச் செயற்பட வேண்டும்.

(வளரும்)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=